தமிழ்/Tamil




போக்குவரத்துச் சலுகை உரிம அட்டை




கோல்ட் சீனியர் (மூத்தோர்)/ ஓபல் (ஓய்வூதியர்)அட்டை

# தகவல் ஏடு

## புகலிடம் கோருவோருக்கான போக்குவரத்துச் சலுகை உரிம அட்டையும் கோல்ட் ஓபல் அட்டையும்

போக்குவரத்துச் சலுகை உரிம அட்டைக்கும் கோல்ட் ஓபல் அட்டைக்கும் இப்பொழுது இணையத்தில் நாலு வயதுக்கும் அதற்கும் மேலான தகுதியுள்ள புகலிடம் கோருவோர்கள் விண்ணப்பிக்க முடியும்.

### யாருக்குத் தகுதி இருக்கிறது?

- விண்ணப்பதாரர்கள் NSW மாநிலத்தில் நிரந்தரமாக வசிக்க வேண்டும்; அத்துடன்
  - Transport for NSW யினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புகலிடம் கோருவோர் ஆதரவு முகமைகள்* ஒன்றிலிருந்து உதவி பெற்றுக்கொண்டிருத்தல்; மற்றும்
  - புகலிடம் கோருபவராக இணைப்பு விசாவுக்கு விண்ணப்பிக்கவுள்ளார்; அல்லது
  - புகலிடம் கோருபவராகத் தற்போது இணைப்பு விசா வைத்திருத்தல்; அல்லது
  - புகலிடம் கோருபவர் என்னும் தகுநிலை குறித்த தீர்மானத்திற்கு எதிராக மேல் முறையீடு செய்யப்படும்.

* *அங்கீகரிக்கப்பட்ட புகலிடம் கோருவோர் ஆதரவு முகமைகளின் பட்டியலை transportnsw.info/asylum-seekers எனும் இணையத்தில் காணலாம்*

### கோல்ட் ஓபல் அட்டையுடன் பயணம் செய்வதில் கிடைக்கும் நன்மைகள் யாவை?

- நாள் ஒன்றுக்குக் கட்டணங்கள் $2.50 க்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- மின்தகவல் அட்டைப் பயணச் சீட்டை நீங்கள் வைத்திருத்தலும் அதனை மறுபயன்பாடு செய்யும் வசதியும்.

### போக்குவரத்துச் சலுகை உரிம அட்டையின் நன்மைகள் யாவை?

- போக்குவரத்து சலுகை உரிம அட்டையானது நீங்கள் கோல்ட் சீனியர் (மூத்தோர்)/ஓய்வூதியர் ஓபல் அட்டையை ஓபல் வலையமைப்புக்குள் பயன்படுத்துவதற்கான உரிமையை அளிக்கிறது.
- $2.50 க்கு கிராமிய ஓய்வு சுற்றுலாப் பயணச்சீட்டு $2.50 க்கு பிராந்திய பகுதிகளில் உள்ளூர் பேருந்துகளில் தினசரி சுற்றுலாப் பயணச்சீட்டு, அல்லது அரை கட்டண சலுகைப் பயணச்சீட்டு உட்பட, சலுகைப் பயணச்சீட்டுகளை வாங்க இந்த அட்டை உங்களுக்கு உரிமை அளிக்கிறது.
- நீங்கள் கோல்ட் ஓபல் அட்டையைப் பயணத்திற்குப் பயன்படுத்தும் போது உங்கள் போக்குவரத்துச் சலுகை உரிம அட்டையை உங்களுடன் வைத்திருக்க வேண்டும் அல்லது உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.

### விண்ணப்பிப்பது எப்படி?

- **Transportnsw.info/asylum-seekers** ல் பட்டியலிடப்பட்ட புகலிடம் கோருவோர் ஆதரவு முகமைகளுள் ('நியமிக்கப்பட்ட முகமைகள் ') ஒன்றுக்குச் சென்று ஒரு போக்குவரத்துச் சலுகை உரிம அட்டைக்கும் கோல்ட் ஓபல் அட்டைக்கும் விண்ணப்பிப்பதற்கு உதவி கேளுங்கள்.

  குறிப்பு: இந்த நியமிக்கப்பட்ட முகமைகளில் ஒன்றின் மூலம் மட்டும் நீங்கள் விண்ணப்பிக்க முடியும்.
- போக்குவரத்துச் சலுகை உரிம அட்டைகளையும் கோல்ட் ஓபல் அட்டைகளையும் NSW முகவரிக்கு மட்டுமே அனுப்ப முடியும்.

### விண்ணப்பிக்க ஏதாவது கட்டணம் செலுத்த வேண்டுமா?

- போக்குவரத்துச் சலுகை உரிம அட்டைக்கும் கோல்ட் ஓபல் அட்டைக்கும் விண்ணப்பிக்கும் போது எந்தக் கட்டணமும் இல்லை. எனினும் நீங்கள் பயணம் செய்வதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

NSW GOVERNMENT | Transport for NSW

## பணம் குறையும் போது நிரப்புவது எப்படி?

- உங்கள் கோல்ட் ஓபல் அட்டையில் பணம் நிரப்பப் பின்வரும் இடங்களுக்குச் செல்லுங்கள்:
  - ஓபல் வலையமைப்பு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உள்ள ஓபல் அட்டையில் பணம் ஏற்றும் இயந்திரங்கள்
  - ஓபல் சில்லறை விற்பனையாளர்கள் (உங்கள் அருகில் உள்ள சில்லறை விற்பனையாளர்களைக் கண்டுபிடிக்க **retailers.opal.com.au** க்கு வாருங்கள்:
  - **opal.com.au**
  - **13 67 25 (13 ஓபல்)**
- தொலைபேசி அல்லது இணைய நிரப்பல்கள் செயல்படத் துவங்க 60 நிமிடங்கள் வரை ஆகலாம்

## எப்படிப் பயணம் செய்வது

- ஒரு பயணத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் ஓபல் அட்டையைப் படிக்கும் சாதனத்தின் எதிராக உங்கள் ஓபல் அட்டை வைப்பதன் மூலம்
- ஓபல் அட்டையை வாசிக்கும் சாதனங்கள் ரயில் நிலையங்கள், பேருந்துகள், படகு மர மேடைகள் மற்றும் இலகு ரயில் நிறுத்தங்கள் ஆகிய இடங்களில் உள்ளன.
- பயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் ஓபல் அட்டையை பயணத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் அட்டை வாசிக்கும் சாதனத்தில் தட்டவேண்டும், அத்துடன் உங்கள் போக்குவரத்துச் சலுகை உரிம அட்டையை வைத்திருக்க வேண்டும், அல்லது நீங்கள் அபராதம் கட்ட வேண்டியிருக்கலாம்.

## புகலிடம் கோருவோர் கோல்ட் ஓபல் அட்டை காலாவதியாகுதல்

- தகுதியுள்ள புகலிடம் கோருவோர்களுடைய கோல்ட் ஓபல் அட்டைகள் வழங்கிய தேதியிலிருந்து 12 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
- போக்குவரத்துச் சலுகை உரிம அட்டையும் 12 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
- இன்னும் தகுதி என்றால், புகலிடம் கோருவோர்கள் மேலும் 12 மாதங்களுக்கு அவர்களுடைய போக்குவரத்துச் சலுகை உரிம அட்டையையும் கோல்ட் ஓபல் அட்டையையும் புதுப்பிக்க முடியும். இதைச் செய்வதற்கு அவர்கள் புகலிடம் கோருவோரின் ஆதரவு முகைமைக்குச் செல்ல வேண்டும் (முந்தைய பக்கம் பார்க்க)

## உங்கள் ஓபல் அட்டை தொலைந்து அல்லது களவாடப்பட்டு விட்டால்

- உங்கள் கோல்ட் ஓபல் அட்டையைப் பதிவு செய்துகொண்டால் அட்டை தொலைந்தால் அல்லது களவாடப்பட்டால் நீங்கள் உங்கள் மிகுதிப் பணத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.
- உங்கள் பதிவுசெய்யப்பட்ட அட்டை தொலைந்தால் அல்லது திருடப்பட்டால் **13 67 25 (13 ஓபல்)** ஐ அழையுங்கள். உங்கள் அழைப்பு நேரத்திலிருந்து உங்கள் மிகுதிப் பணம் பாதுகாக்கப்படும் அத்துடன் அதனை ஒரு புதிய அட்டைக்கு மாற்ற முடியும்.
- ஒரு மாற்று கோல்ட் ஓபல் அட்டையைப் பெற நீங்கள் **13 67 25 (13 ஓபல்)** ஐ அழைக்க வேண்டும் (ஒரு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்).

## உங்கள் போக்குவரத்துச் சலுகை உரிம அட்டை தொலைந்து அல்லது களவாடப்பட்டு விட்டால்.

- உங்கள் போக்குவரத்துச் சலுகை உரிம அட்டை தொலைந்து அல்லது களவாடப்பட்டு விட்டால் ஒரு மாற்று அட்டையைப் பெற நீங்கள் **transportnsw.info/asylum-seekers** எனும் இணையத்திற்குச் செல்லுங்கள் அல்லது **131 500** ஐ அழையுங்கள் (ஒரு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்).

## உங்கள் கோல்ட் ஓபல் அட்டையை ஏன் பதிவு செய்யவேண்டும்?

- உங்கள் அட்டை காலாவதியாகும் போது நாங்கள் உங்களுக்கு ஞாபகப்படுத்த முடியும்.
- உங்கள் அட்டை தொலைந்தால் அல்லது திருடப்பட்டால் அதனுடைய மிகுதிப் பணம் பாதுகாக்கப்படும்.
- உங்கள் அட்டை காலாவதியாகும் போது பாவிக்காத மிகுதிப் பணம் இருந்தால் அதனைப் பெற முடியும்.
- உங்கள் அட்டையைப் பதிவு செய்ய தொலைபேசி **13 67 25 (13 ஓபல்)** ஐ அழையுங்கள் அல்லது **opal.com.au** எனும் வலைத்தளத்தைப் பாருங்கள்.

## மேலும் தகவல் வேண்டுமா?

- தகுதியுள்ள தஞ்சம் கோருவோர்களுக்கான போக்குவரத்துச் சலுகை உரிம அட்டை பற்றிய மேலதிகத் தகவலுக்கு **transportnsw.info/asylum-seekers** ஐ பாருங்கள் அல்லது தொலைபேசி இலக்கம் **131 500** ஐ அழையுங்கள்.
- தகுதியுள்ள புகலிடம் கோருவோர் களுக்கான கோல்ட் ஓபல் அட்டை பற்றிய மேலதிகத் தகவலுக்கு **opal.com.au** ஐ பாருங்கள் அல்லது தொலைபேசி இலக்கம் **13 67 25 (13 ஓபல்)** ஐ அழையுங்கள்.

TaC/AS/A4/TD 017 11/2016

NSW GOVERNMENT | Transport for NSW